1984 மார்ச் 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இப்போது மேலப்பாளையத்திற்கு, பாளையங்கோட்டை மேலப்பாளையம் இரண்டையும் சேர்த்துக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் வழியாக குடிதண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மேலப்பாளையத்திற்கு தனிமைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகிக்கவேண்டும் என்று மக்கள் விரும்பியதற்கு ஏற்ப, குறிப்பாக அந்தத் தொகுதி எம். எல். ஏ. மிகவும் வலியுறுத்திய தன் காரணமாக, அதைப் பரிசீலனை செய்து, மேலப்பாளையத்திற்கும், தனிமைப்படுத்தப்பட்ட குடிதண்ணீர்க் கொடுப்பதற்கு ஆய்வு செய்து ரூ. 142.20 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து கடன் பெறுவதற்காக அரசு நிலை ஆணை எண் 1841, உள்ளாட்சித்துறை, நாள் 30—11—1982-ல் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இத் திட்டம் டிசம்பர் 1985-ல் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மேலப்பாளையம் நகராட்சியில் இருக்கக்கூடிய அனைத்து பகுதிகளுக்கும், குறிப்பாக கணேசபுரம் என்று சொல்லக்கூடிய ஆதி திராவிடர் வாழ்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும் பயன்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கணேசபுரம் எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. மேலப்பாளையத்தில் ஒவ்வொருவருக்கும் 90 லிட்டர் குடி தண்ணீர்க் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 90 லிட்டர் தண்ணீர் ஒரு நாளைக்கு ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், அது நல்ல கணிசமான அளவு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கான கூட்டுறவுச் சங்கங்களின் நன்கொடை.

281—(*வினா எண் 16178)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்துக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நன்கொடை வழங்கியுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

[1984 மார்ச் 15

(ஆ) இத்திட்டத்திற்காக 29—2—1984 வரை, கூட்டுறவு அமைப்புகள் ரூ. 52,20,090.45 நன்கொடையாக வழங்கியுள்ளன.

		ரூ.
1.	கூட்டுறவு பால் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்	2,22,426.55
2.	நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ..	7,42,565.00
3.	கூட்டுறவு அச்சகங்கள்	15,839.00
4.	கூட்டுறவு பாங்குகள்	20,63,712.90
5.	கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்	16,00,000.00
6.	கூட்டுறவு நூற்பு மற்றும் நெசவு ஆலைகள் ..	4,70,000.00
7.	இதர கூட்டுறவு அமைப்புகள்	1,05,547.00
	மொத்தம் ..	52,20,090.45

(முற்பகல் 9-50)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 52 லட்சம் ரூபாயை கூட்டுறவுச் சங்கங்கள், முதலமைச்சருடைய குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்காக வழங்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களில் அல்லது நிறுவனங்களில் இன்றைய தினம் தேர்தல் நடத்தப்படாத காரணத்தாலே, மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாதிருக்கும் கால கட்டத்தில், அதிகாரிகள் உண்மையாகவே லாபம் பெற்று, அந்த லாபத்திலிருந்து அந்தத் தொகையை அளித்திருக்கிறார்களா? இல்லை சில அதிகாரிகள் சொல்வதைப் போல, அரசாங்கம் கேட்டதை நாங்கள் தந்தோம் என்ற வகையில், லாபம் இல்லாவிட்டாலும் கூட்டுறவுச் சங்க நிதியிலிருந்து கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எந்த நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. லாபத்திலேயிருந்து தான் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வெல்ஃபேர் பண்டுக்கு ஒதுக்கிய பணத்திலிருந்து தான் தந்திருக்கிறார்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்காக வேண்டி, பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் நிதி உதவி அளித்தது சம்பந்த

1984 மார்ச் 15]

மாக ஒரு புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் ஏதேனும் நிதி உதவி கொடுக்கப்பட்டுள்ளதா ? கொடுத்திருப்பதாக சொல்லப் படுகிறதே, அந்த விவரம் ஏன் இதில் அறிவிக்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்பட்ட பணத்தைப் பற்றியது. வேறு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நிறுவனங்கள் பல தங்களது உயர் வருமானத்தில் பெரும் பகுதியை வருமான வரியாக செலுத்திவிடுகின்றன. பசிப் பிணி போக்கி, கல்வி அறிவு வளர்க்கக்கூடிய, '[illegible] கார்ட் பிளான்' என்று சொல்லக் கூடிய சத்துணவு திட்டத்திற்கு இந்த அரசு நிறுவனங்கள் நிதி வழங்கினால், அதற்கு வருமான வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா ? அத்தோடு இம்மாதிரியான தொகை முழுவதும் முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கே பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.

சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்கள்.

282— (*வினா 21466)—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களுக்குத் தற்பொழுதுள்ள சம்பளத்தைவிட இன்னும் கூடுதலாகச் சம்பளம் அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) அமைப்பாளர்களை முழு நேர ஊழியர்களாக எடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அறிவிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ), (ஆ) மற்றும் (இ): கருத்துரு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பணிபுரியக் கூடியவர்களுக்கு தற்போது 150 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதில் சமையல் வேலை செய்யக்கூடியவர்களுக்கும், ஆயாக்களுக்கும்